[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 13

இலாக்கா மூலமாகவும் சினிமா ஸ்லைடு, போஸ்டர்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு இதுபற்றிச் சொல்லி, அறிவை வளர்ப்பதற்குத் திட்டம் தீட்டப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது.

(உ) மருங்காபுரி தொகுதி, பொன்னியாறு அணை மண்மேடிட்டுள்ளதால் விவசாயிகள் பாதிப்பு.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''மருங்காபுரி தொகுதி—வையம்பட்டி ஒன்றியத்தில் உள்ள பொன்னியாறு அணையில் மண்மேடு அதிகமாக உள்ளதால் அவைகளை நம்பியுள்ள விவசாயிகளின் பாதிப்பு குறித்த'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதி வையம்பட்டி ஒன்றியத்தில் உள்ள பொன்னியாறு நீர்த்தேக்கம் 1974-ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. இதன் நீர்த்தேக்க அளவு 51 அடியாகும். இதன் கொள்ளளவு 120 மில்லியன் கன அடிகளாகும். இந்த நீர்த்தேக்கத்திற்கு மலை வனாந்திரப் பகுதியில் இருந்து நீர்வரத்து வருவதால் கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் மண் படிந்து வருகிறது. இதனால் சுமார் 7 மில்லியன் கன அடி கொள்ளளவு குறைந்துள்ளது. எனினும் இந்த நீர்த்தேக்கத்தினால் பயனடையும் பாசனம் பாதிக்கப்படவில்லை.

இந்த அணையின் கொள்ளளவு மண் படிந்து பாதிக்கப்படுவதைத் தடுக்க பூண்டியில் உள்ள நீரியல் மற்றும் நீர் நிலை இயல் ஆராய்ச்சிக் கழகம், நீர் நிலை ஆய்வு மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் கிடைக்கும் முடிவுகளைத் தொடர்ந்து மண் மேடிடுவதைத் தடுப்பதற்காக தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. க. சோலைராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், நீர் நிலை இயல் ஆராய்ச்சிக் கழகம் நீர் நிலை ஆய்வு மேற்கொண்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த ஆய்வினை முடித்த பிறகு மிக விரைவிலே அந்த மண் மேட்டினை அகற்றித் தருகிற பணியினை அமைச்சர் அவர்கள் செய்து தர முன்வருவார்களா? மேலும் வருகிற காலம் மழைக்காலமாக இருக்கிற காரணத்தாலும் அந்த அணைக்

1987 நவம்பர் 13] [திரு. க. சோலைராசு]

கட்டைச் சுற்றிலும் இருக்கிற வரப்பு, வாய்க்கால்கள் மிகவும் பழுதடைந்து இருக்கிற காரணத்தாலும்—பல ஆண்டுகளுக்கு முன்பு பழுது பார்த்த காரணத்தாலே—சீரழிந்து இருக்கிற அந்த வரப்பு வாய்க்கால்களை செம்மை செய்வதற்கு தற்போது நிதி ஒதுக்கித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர் நிலை ஆய்வு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முடிவுகளை மிக விரைவாக வாங்கி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். வரத்துக் கால்வாய்கள் தூர்ந்துபோய் இருப்பதை என்னுடைய கவனத்திற்கு தற்போது கொண்டு வந்து இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய தகுந்த நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்திரவிடப்படும்.

திரு. க. சோலைராசு: துணைத் தலைவர் அவர்களே, மணப்பாறை வட்டத்திலே மக்களுடைய பொழுதுபோக்காக அங்கே இருக்கக்கூடியது இந்த அணை. இந்த அணையிலே இருக்கின்ற, கண்கவரும் வகையில் இருக்கின்ற அந்தப் பூங்கா தற்போது சிறிதுகாலமாக சீரழிந்து இருக்கிறது. எனவே பூங்காவைச் செம்மைப்படுத்துவதற்கு அதிக நிதியினை ஒதுக்க வேண்டும். மேலும் இந்த அணைக்கட்டிற்குச் செல்வதற்குத் தேவையான சாலை மிகவும் பழுதடைந்திருக்கிறது. சாலையைச் சரி செய்வதற்காக, பொதுப்பணித்துறையினரைக் கேட்டால், அணைக்கட்டை மேம்படுத்துவதற்கு மட்டுமே நிதியிருக்கிறது என்று சொல்கிறார்கள். சாலைக்குத் தனியாக நிதி இல்லை என்று சொல்கிறார்கள். எனவே இந்த அணைக்கட்டுக்குச் செல்லக்கூடிய அந்த சாலையை மேம்படுத்துவதற்கு விரைவிலே நிதி ஒதுக்கித்தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அதிகாரிகளோடு பேசி, நிதிநிலைமைக்கேற்ப தகுந்த முடிவு எடுக்கப்படும்.

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.